Government of Tamilnadu

# STANDARD THREE

## TERM I

தமிழ்
ENGLISH
MATHEMATICS
SCIENCE
SOCIAL SCIENCE

**Untouchability**
**Inhuman - Crime**

Department of School Education

A Publication Under
Government of Tamilnadu
Distribution of Free Textbook Programme
(NOT FOR SALE)

© Government of Tamilnadu
First Edition - 2012
(This book is published under Uniform System of School Education Scheme in Trimester Pattern)

Textbook Prepared and Compiled by
Directorate of Teacher Education Research and Training,
College Road, Chennai - 600 006.

Wrapper & Book Design
V. James Abraham
R. Lakshmi

Textbook Printing
Tamilnadu Textbook Corporation
College Road, Chennai - 600 006.

This book has been printed on 80 G.S.M. Maplitho Paper

Price : Rs.

Printed by Offset at :

# நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

# THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

**SHORT VERSION**

Jana-gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Jaya he, jaya he, jaya he
Jaya jaya, jaya, jaya he.

## AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

## THE NATIONAL INTEGRATION PLEDGE

“I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation.”

“I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means.”

## A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vande mataram!

Signature

# CONTENT


## தமிழ் (1-36)

| பாட எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | கூடி ஆடி மகிழ்வோம் | 3 |
| 2. | விளையாடுவோம் வாங்க! | 5 |
| 3. | கௌதாரியும் முயலும் | 9 |
| 4. | மகிழ்ச்சி உலகம் | 12 |
| 5. | மல்லிகை உணவகம் | 14 |
| 6. | விட்டுக்கொடு விருப்பத்துடன் | 18 |
| 7. | காண்போம்! கற்போம்! | 22 |
| 8. | நேர்மை தந்த பரிசு | 27 |
| 9. | ஊர் செழித்தது | 30 |
| 10. | புதிய ஆத்திசூடி | 34 |
| 11. | அகரமுதலி | 36 |

## ENGLISH (37-74)

| Unit | Title | Page No. |
|---|---|---|
| 1. | Unity Is Strength | 38 |
| | My Friend (Poem) | 48 |
| 2. | Beno And The Butterfly | 51 |
| | Colour Butterflies (Poem) | 59 |
| 3. | Who Saved The Tree? | 61 |
| | Five Tall Teak Trees (Poem) | 72 |

## MATHEMATICS (75-152)


| Unit | Title | Page No. |
|---|---|---|
| 1. | SHAPES AND FIGURE - I | 76 |
| 2. | SHAPES AND FIGURE - II | 88 |
| 3. | NUMBERS | 92 |
| 4. | ADDITION | 118 |
| 5. | SUBTRACTION | 133 |


## SCIENCE (153-206)


| Unit | Title | Page No. |
|---|---|---|
| 1. | OUR COLOURFULL GARDEN | 155 |
| 2. | ANIMALS AROUND US | 168 |
| 3. | SMALL CREATURES IN THE GARDEN | 179 |
| 4. | JUNGLE SAFFARI | 187 |
| 5. | WITHIN US | 198 |


## SOCIAL SCIENCE (207-252)


| Unit | Title | Page No. |
|---|---|---|
| 1. | THE WORLD I LIKE | 209 |
| 2. | MY NEIGHBOURHOOD | 216 |
| 3. | ON MY WAY TO SCHOOL | 222 |
| 4. | KNOW YOUR DIRECTIONS | 233 |
| 5. | ARE YOU SAFE ON THE ROAD | 242 |

# தமிழ்

## மூன்றாம் வகுப்பு

### முதல் பருவம்

தமிழ்


பாடநூல் குழு

குழுத்தலைவர்

கோ. பழநிவேல்முருகன்,
மேனாள் முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், முனைஞ்சிப்பட்டி, நெல்லை மாவட்டம்.

மேலாய்வாளர்கள்

க.சு. சங்கீதா, உதவிப் பேராசிரியர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம், சென்னை – 6.

முனைவர் கோ. விருதசாரணி, விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

தே. திருவளவன், விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், புதுச்சேரி மாநிலம்.

வல்லுநர்கள்

த. தனுஷ்கோடி,
முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம்.

எ. முத்துக்கிருஷ்ணன்,
(மேனாள் கல்விப்பேரவைக்குழு உறுப்பினர், சென்னைப் பல்கலைக்கழகம்.)
முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

நூலாசிரியர்கள்

பொ. வாசுகி, தலைமை ஆசிரியர், ஊ . ஒ . நடுநிலைப் பள்ளி , அத்தனூர்ப்பட்டி, சேலம் மாவட்டம்.

இரா. மூர்த்தி, தலைமை ஆசிரியர், குமரன் உயர்நிலைப் பள்ளி , கீழநாச்சிப்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம் .

சு. வளர்மதி, இடைநிலை ஆசிரியர், இராமநாதன் செட்டியார் ந. ந. நி. பள்ளி, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் .

இரா. வசந்தி, இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. நடுநிலைப் பள்ளி, மஞ்சம்பாக்கம் , திருவள்ளூர் மாவட்டம்.

ச. பஞ்சவர்ணம், தலைமை ஆசிரியர், ஊ . ஒ . தொடக்கப் பள்ளி, கொட்டிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.

நா. ஆறுமுகம், இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொடக்கப் பள்ளி , மேலக்கரைப்பட்டி, எடப்பாடி ஒன்றியம், சேலம் மாவட்டம்.

ஓவியம், அட்டைப் படம் : அரஸ்

வடிவமைப்பு: எஸ். மாரீஸ்

| திறன் பகுதி | திறன் | பாடஎண் |
|---|---|---|
| 1. கேட்டல் | | |
| | 1. வருணனை, விடுகதைப் பாடல்களைக் கேட்டறிதல் | 1 |
| | 2. சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டறிதல் | 3, 6, 8 |
| 2. பேசுதல் | | |
| | 1. தங்குதடையின்றிப் பேசுதல் | 2 |
| 3. படித்தல் | | |
| | 1. அறிவிப்புகள், விளம்பரங்கள், சாலைக் குறியீடுகளைப் படித்தல் | 7 |
| | 2. கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள், கதைகளை உரியஒலிப்புடன் படித்தல் | 3, 6, 8 |
| 4. எழுதுதல் | | |
| | 1. படத்தைப் பார்த்துச் சிறுசிறு தொடர்கள் எழுதுதல் | 4 |
| | 2. இடைவெளி விட்டு எழுதுதல் | 5 |
| | 3. பத்தியைப் படித்து எளிய வினாக்களுக்கு விடையளித்தல் | 8 |
| 5. படைப்பாற்றல் | | |
| | 1. படத்தை நிறைவு செய்தல் | 8 |
| | 2. கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்திக் கதை உருவாக்குதல் | 9 |
| 6. நடைமுறை இலக்கணம் | | |
| | 1. பெயருக்கேற்ற வினை முடிவு அறிதல் | 6 |
| 7. தானே கற்றல் | | |
| | 1. அகர முதலியைப் பயன்படுத்துதல் | 11 |
| | 2. முதல் இரண்டு எழுத்துகளின் அடிப்படையில் அகர வரிசைப்படுத்துதல் | 9 |
| 8. சொல்லாட்சித்திறன் | | |
| | 1. சொற்களஞ்சியம் பெருக்குதல் | அனைத்தும் |

# 1. கூடி ஆடி மகிழ்வோம்



தோட்டம் நல்ல தோட்டம் – நம்மைச்
சொக்க வைக்கும் தோட்டம்
கூட்டமாக நாமும் – ஒன்றாய்க்
கூடி ஆடும் தோட்டம்.

வண்ண வண்ண மலரால் – நம்மை
மகிழ வைக்கும் செடிகள்!
தின்னத் தின்னப் பழங்கள் – மேலும்
தின்னக் கொடுக்கும் மரங்கள்!

கொஞ்சும் கிளியின் குரலும் – கருங்
குயிலின் இசையும், அடடா!
நெஞ்சை அள்ளுகிறதே! – இதை
நினைக்கும் போதே இன்பம்.



பட்டுப் போல அழகாய் – புல்
படர்ந்திருக்கும் தரையில்
விட்டுப் போக மனமே – இல்லை
மிகவும் நல்ல தோட்டம்.

அழ. வள்ளியப்பா



## பயிற்சிகள்

அ) பள்ளியில் எவ்வாறு தோட்டம் அமைக்கலாம் என நண்பர்களுடன் கலந்துரையாடுக.

ஆ) பாடலில் இடம் பெற்றுள்ள வருணனைகளை எழுதுக.

(எ.கா): சொக்கவைக்கும் தோட்டம்

1. ______
2. ______
3. ______
4. ______
5. ______

இ) சேர்த்து எழுதுக.

1. கருமை + குயில் = ______
2. படர்ந்து + இருக்கும் = ______
3. பட்டு + போல = ______
4. வண்ணம் + மலர் = ______

ஈ) சொற்றொடர் உருவாக்கி எழுதுக.

| | | |
|---|---|---|
| மான் | விரைவாக | ஓடும் |
| கன்றுக்குட்டி | | |
| குதிரை | துள்ளி | |
| தொடர்வண்டி | | |

(எ.கா) : மான் விரைவாக ஓடும்.

1. ______
2. ______
3. ______
4. ______
5. ______

உ) விடை எழுதுக.

1. குழந்தைகள் கூடி ஆடும் இடம் எது ?
2. நெஞ்சை அள்ளுபவை எவை ?
3. மரங்கள் எவற்றைக் கொடுக்கின்றன ?
4. பட்டுப் போல அழகாய்ப் படர்ந்திருப்பது எது ?

# 2. விளையாடுவோம் வாங்க!




என் பெயர் எழிலன். எங்கள் ஊர் புதூர். எங்கள் ஊரில் ஆண்டுதோறும் திருவிழா நடைபெறும். அதில் பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் எனத் தனித்தனியாகப் போட்டிகள் நடைபெறும்.

கடந்த ஆண்டு, ஊராட்சி மன்ற விளையாட்டுத் திடலில் போட்டிகள் நடைபெற்றன. அப்போட்டிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் தலைமை தாங்கினார்.

பக்கத்து ஊர் மக்களும் அவ்விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டனர். போட்டியில் கலந்து கொண்டோர் முதலில் தம் பெயரைப் பதிவு செய்து கொண்டனர். பெரியவர்களுக்குக் கபடி, உறியடித்தல், வழுக்கு மரம் ஏறுதல், கயிறு இழுத்தல் முதலிய போட்டிகள் நடைபெற்றன.

சிறுவர்களுக்குத் தவளைஓட்டம், முயல்ஓட்டம், உருளைக்கிழங்கு சேகரித்தல், முறுக்குக்கடித்தல் முதலிய போட்டிகள் நடத்தப்பட்டன. பெண்களுக்கு இசைநாற்காலிப் போட்டியும் கோலப் போட்டியும் நடத்தப்பட்டன.



தவளைஓட்டம், முறுக்குக்கடித்தல் ஆகிய போட்டிகளில் நான் கலந்து கொண்டேன். தவளை ஓட்டப்போட்டியில் முதலிடத்தைப் பெற்றேன்.



ஊராட்சி மன்றத் தலைவர் எனக்குப் பரிசு வழங்கினார். அவர் மேலும் பல பரிசுகள் பெறுதல் வேண்டும் என என்னை வாழ்த்தினார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இந்த ஆண்டு நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளுக்கான அறிவிப்புகளை ஒலிபெருக்கியில் அறிவிக்கிறார்கள். அதில் கலந்து கொண்டு பரிசுகள் பல பெற வேண்டும் என என் மனம் துள்ளுகிறது.

## பயிற்சிகள்

### அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. ஒலிபெருக்கி = ____________________
2. திடல் = ____________________

### ஆ) பிரித்து எழுதுக.

1. அ + விளையாட்டு = ____________________
2. கோலம் + போட்டி = ____________________
3. முறுக்கு + கடித்தல் = ____________________

### இ) சேர்த்து எழுதுக.

1. ஓட்டம் + போட்டி = ____________________
2. தனி + தனியாக = ____________________
3. முதல் + இடம் = ____________________
4. மன்றம் + தலைவர் = ____________________

ஈ) அடைப்புக்குள் இருக்கும் சொற்களைக் கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக.

(திடலில், விளையாட்டு, பரிசுகள்)

1. ஊராட்சி மன்ற விளையாட்டுத் _______ போட்டிகள் நடைபெற்றன.
2. போட்டியில் கலந்து கொண்டு மேலும் பல _______ பெறுதல் வேண்டும்.
3. ஒலிபெருக்கியில் _______ போட்டிகள் பற்றி அறிவிக்கிறார்கள்.

உ) விடை எழுதுக.

1. விளையாட்டு விழாவிற்குத் தலைமை தாங்கியவர் யார்?
2. சிறுவர்களுக்கு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் எவை?
3. எழிலன் எந்தெந்தப் போட்டிகளில் கலந்து கொண்டான்?
4. ஒலிபெருக்கியில் எதனைப் பற்றி அறிவித்தார்கள்?
5. உனக்குப் பிடித்த விளையாட்டுகளின் பெயர்களை எழுதுக.

ஊ) சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. மகிழ்ச்சி : ____________________
2. விளையாட்டு : ____________________
3. பரிசு : ____________________
4. போட்டி : ____________________

எ) எடுப்போம் ! பேசுவோம் !

மாணவர்களை வட்டமாக உட்கார வைத்திடுக. கொடுக்கப்பட்ட துண்டுத் தாள்களில் எனது ஊர், எனது தெரு, எங்கள் பள்ளி, அங்காடித் தெரு, பூங்கா, நூலகம் எனத் தனித்தனியாக எழுதுக. அவற்றை ஓர் அட்டைப்பெட்டியில் போடுக. பெட்டியைச் சுற்றுக்கு விடுக. ஆசிரியர், கையொலி எழுப்பும்போது பெட்டி யாரிடம் உள்ளதோ, அவர் ஒரு தாளை எடுத்தல் வேண்டும். அதில் உள்ள தலைப்பினைப் பற்றிப் பேசுதல் வேண்டும்.

ஏ) உனக்குப் பிடித்த விளையாட்டு ஏதேனும் ஒன்றின் பெயரைக்கூறி, அதன் விதிமுறைகள் மற்றும் விளையாடும் முறை பற்றி நண்பர்களுடன் கலந்துரையாடுக.

ஐ) கீழ்க்காணும் சொற்களின் முதல் எழுத்தை மாற்றிப் புதிய சொற்களை உருவாக்குக.

1. ஓட்டம் ____________
2. திடல் ____________
3. போட்டி ____________
4. சொல் ____________
5. கயிறு ____________

ஒ) உங்கள் ஊரைப் பற்றி எழுதி நிரப்புக.

என் ஊரின் பெயர் ______________________________.

என் ஊரில் ________________________ உள்ளது.

என் வீடு ____________________ தெருவில் அமைந்துள்ளது.

என் வீடு ____________________ வீடு.

என் ஊரில் ____________________ கோவில் உள்ளது.

____________________________________________________

____________________________________________________

ஓ) கீழுள்ள எழுத்துகளில் தொடங்கும் சொற்களை எழுதுக.

(எ.கா.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச | சங்கு | சக்கரம் | சந்தனம் | சல்லடை | சட்டை |
| அ | ______ | ______ | ______ | ______ | ______ |
| உ | ______ | ______ | ______ | ______ | ______ |
| கா | ______ | ______ | ______ | ______ | ______ |
| தி | ______ | ______ | ______ | ______ | ______ |
| மு | ______ | ______ | ______ | ______ | ______ |
| செ | ______ | ______ | ______ | ______ | ______ |
| கோ | ______ | ______ | ______ | ______ | ______ |

# 3. கௌதாரியும் முயலும்

கௌதாரி ஒன்று பெரிய புதரில் பல காலமாக வாழ்ந்து வந்தது. ஒரு நாள், இரை தேடி வெகுதொலைவு பறந்து சென்றது. நெல்வயல் ஒன்றனைக் கண்டது. வயலில் நெற்கதிர்கள் விளைந்திருந்தன. கௌதாரி, நெல் மணிகளை வயிறு நிறையத் தின்றது. அங்கேயே அது தங்கிவிட்டது.

நெடுநாளாகியும் கௌதாரி, புதருக்குத் திரும்பவில்லை. எனவே, கௌதாரியின் புதரில் முயல் ஒன்று வாழத் தொடங்கியது. அறுவடைக்காலம் முடிந்ததும், கௌதாரி தன் இருப்பிடத்திற்குத் திரும்பியது. அங்கு முயல்



இருப்பதனைப் பார்த்துச் சினம் கொண்டது. முயலிடம், 'இஃது என் இடம், நீ வெளியே போ' என்று கூறியது. 'நான் இந்த இடத்தில் நெடுநாளாக இருக்கிறேன். இந்த இடம் எனக்கே உரியது' என்றது முயல்.

புதர் யாருக்கு உரியது என்பதனை முடிவு செய்ய, இரண்டும் நடுவர் ஒருவரைத் தேடிச் சென்றன. அவை வயதான பூனை ஒன்றனைக் கண்டன. அப்பூனை, பசியினால் களைத்துக் கண்மூடி உட்கார்ந்து இருந்தது. இவரிடம் கேட்போம், நமக்கு நீதி கிடைக்கும் என்று கௌதாரியும் முயலும் பேசிக் கொண்டன.

இருவரும் பேசிக் கொண்டதனைப் பூனை கேட்டது; தேடாமலேயே உணவு கிடைத்துவிட்டது என்று மகிழ்ந்தது; கண்களை மூடி மந்திரம் கூறுவதனைப்போல முணுமுணுத்தது. இதனைப் பார்த்த கௌதாரிக்கும் முயலுக்கும் பூனையிடம் நம்பிக்கை ஏற்பட்டது. இரண்டும் பூனையின் அருகே சென்று வணக்கம் கூறின. கண் விழித்த பூனை, 'நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டது.



இரண்டும், நடந்ததனைக் கூறி நீதி கேட்டன. வஞ்சக எண்ணம் கொண்ட பூனை, 'எனக்கு வயதாகிவிட்டது; காது சரியாகக் கேட்கவில்லை; சற்று அருகில் வந்து பேசுங்கள்' என்று கூறியது.

கௌதாரியும் முயலும், பூனையின் அருகில் சென்றன. பூனை, இரண்டையும் கவ்விப் பிடிக்க முயன்றது. ஆபத்தை உணர்ந்த முயல், அதனிடமிருந்து தப்பி விரைவாக ஓடியது. கௌதாரியும் சட்டெனப் பறந்து தப்பித்தது.

'நல்லவேளை, தப்பிப் பிழைத்தோம். இனிச் சண்டை இல்லாமல் ஒன்றுபட்டு இருப்போம்' என்று அவை இரண்டும் முடிவெடுத்தன.

## பயிற்சிகள்

### அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. இருப்பிடம் = ______________
2. வஞ்சகம் = ______________

### ஆ) பிரித்து எழுதுக.

1. விளைந்திருந்தன = ______________
2. அறுவடைக்காலம் = ______________
3. நெடுநாள் = ______________
4. சண்டையில்லாமல் = ______________
5. முடிவெடுத்தன = ______________

### இ) சேர்த்து எழுதுக.

1. அ + பூனை = ______________
2. நெல் + கதிர்கள் = ______________
3. தேடி + சென்றன = ______________
4. கவ்வி + பிடிக்க = ______________

### ஈ) விடை எழுதுக.

1. கௌதாரி எங்கு வாழ்ந்து வந்தது?
2. கௌதாரி ஏன் கோபம் கொண்டது?
3. முயலும் கௌதாரியும் யாரைத் தேடிச் சென்றன?
4. தேடாமலேயே உணவு கிடைத்துவிட்டது என்று கூறியது யார்?
5. கௌதாரியும் முயலும், சண்டையில்லாமல் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தன. எவ்வாறு?

### உ) உரிய சொல்லை எடுத்து எழுதுக.

1. புறாக்கள் _______ தேடிச் சென்றன. (இரை / இறை)
2. என் வீட்டு மாடி _______ யில் புத்தகங்கள் இருக்கின்றன. (அரை / அறை)
3. கடைக்காரர் _______ இல்லையெனக் கூறினார். (சில்லரை/ சில்லறை)
4. உலகம் _______ விரிந்தது. (பறந்து / பரந்து)

# 4. மகிழ்ச்சி உலகம்



படத்தில் நிகழும் செயல்கள் பற்றிச் சிறு தொடர்கள் எழுதுக.

எடுத்துக்காட்டு :

அணில் ஓடுகிறது.

## பயிற்சிகள்

### அ) படத்தைப் பார்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மரத்தில் சிறுமி ____________ ஆடுகிறாள்.
2. மரப்பொந்தில் இரண்டு ____________ உள்ளன.
3. சிலந்திப் பூச்சி ____________ விட்டுக் கீழே விழுகிறது.
4. காகம், கூட்டில் உள்ள தன் குஞ்சுகளுக்கு ________ ஊட்டுகிறது.

### ஆ) சொற்களை இணைத்துத் தொடராக்குக .

| | | |
|---|---|---|
| வண்ணத்துப் பூச்சிகள் | பூக்கள்மேலே | உள்ளது. |
| இலைகளுக்கிடையே | இலையின்மேல் | ஊர்கின்றன. |
| சிவப்பு வண்டுகள் | சிலந்தி வலை | பறக்கின்றன. |

1. ____________________
2. ____________________
3. ____________________

### இ) கொடுத்துள்ள சொற்களைக் கொண்டு சொற்றொடர் அமைக்க.

வண்ணத்துப்பூச்சி, மரங்கொத்தி, அணில்கள், புழுக்கள்

(எ.கா.) : மரக்கிளையில் அணில்கள் ஓடி விளையாடுகின்றன.

1. ____________________
2. ____________________
3. ____________________

### ஈ) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

1. நேற்று மழை பொழிந்தது
2. தேன்மொழி நன்கு கற்றாள் நல்ல மதிப்பெண்கள் பெற்றாள்
3. என்னே இமயத்தின் உயரம்
4. தமிழ்நாட்டில் தமிழ் மலையாளம் தெலுங்கு முதலிய பல மொழிகள் பேசப்படுகின்றன

# 5. மல்லிகை உணவகம்




( செந்தில் காலைச் சிற்றுண்டிக்காக மல்லிகை உணவகம் சென்றான். சாப்பிடுவதற்கு இரண்டு தோசை கொண்டுவரச் சொன்னான்.)

**செந்தில்** : ஐயா, தோசைக்குச் சர்க்கரை கொண்டு வாருங்கள்.

**கடைக்காரர்** : தம்பி! நீங்கள் அறிவிப்புப் பலகையைப் பார்க்கவில்லையா? இன்று முதல்தோசைக்குச் சர்க்கரை இல்லை, என்று எழுதி வைத்துள்ளோமே!

**செந்தில்** : ஐயா, அறிவிப்புப் பலகையைப் படித்தேன். முதல் தோசையைச் சாப்பிட்டுவிட்டேன். இரண்டாவது தோசைக்குத்தான் சர்க்கரை கேட்கிறேன்.

**கடைக்காரர்** : தம்பி, நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே!

செந்தில் : ஐயா, இன்று முதல்தோசைக்குச் சர்க்கரை இல்லை என்றுதானே எழுதப்பட்டுள்ளது. அப்படியென்றால், இரண்டாவது தோசைக்குச் சர்க்கரை உண்டு என்றுதானே பொருள். அதனால்தான், இரண்டாவது தோசைக்குச் சர்க்கரை கேட்டேன்.

கடைக்காரர் : ஆகா! இப்படியும் பொருள் கொள்ளலாமா? நல்லது தம்பி, நாளை மாற்றி விடுகிறோம்.

(கடைக்காரர் சர்க்கரையைக் கொண்டுவந்து வைக்கிறார்.)

(மறுநாள், செந்தில் சிற்றுண்டி உண்ண அதே உணவகத்திற்குச் செல்கிறான். அங்கே இருந்த அறிவிப்புப் பலகையைப் படித்தான். தோசை வாங்கினான்.)

செந்தில் : ஐயா, தோசைக்குச் சர்க்கரை கொண்டு வாருங்கள்.

கடைக்காரர் : தம்பி, அறிவிப்புப் பலகையைப் பாருங்கள். "இனி, மேல் தோசைக்குச் சர்க்கரை இல்லை" என எழுதி இருக்கிறோமே!

செந்தில் : அதனால்தான், மேல் தோசையைச் சாப்பிட்டு விட்டுக் கீழ்த் தோசைக்குச் சர்க்கரை கேட்கிறேன், ஐயா.

கடைக்காரர் : அடடே, இப்படியும் பொருள்கொள்ள வாய்ப்பு இருக்கிறதா?

(நாளை அறிவிப்புப் பலகையை எப்படி மாற்றுவது ? எனச் சிந்தித்தபடி சர்க்கரை கொண்டுவந்து தருகிறார்.)

அறிவிப்புப் பலகையில் பொருள் மாறாமல் இருக்க, சொற்களுக்கு இடையே எவ்வாறு இடைவெளிவிட்டு எழுதுதல் வேண்டும் என்று, கடைக்காரருக்கு உதவுங்களேன்.

___________________________________

___________________________________

___________________________________

## பயிற்சிகள்

அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

சிற்றுண்டி = ____________________

ஆ) பிரித்து எழுதுக.

1. காலைச்சிற்றுண்டி = ____________ + ____________
2. உணவகம் = ____________ + ____________
3. அறிவிப்புப்பலகை = ____________ + ____________
4. எடுத்துவந்தார் = ____________ + ____________

இ) உரிய விடையை ✓ எடுத்தெழுதுக.

1. முதல் நாள் செந்தில், கடைக்காரருக்குக் கூறிய பதில் எது?
   - அ) சர்க்கரை கட்டாயம் வேண்டும். ☐
   - ஆ) இரண்டாவது தோசைக்குத்தான் சர்க்கரை கேட்டேன். ☐
   - இ) எனக்குக் காரம் பிடிக்காது. ☐
2. இரண்டாம் நாள் செந்தில், கடைக்காரருக்குக் கூறிய பதில்.
   - அ) இரண்டு தோசைக்கும் சர்க்கரை வேண்டும். ☐
   - ஆ) சர்க்கரைதான் எனக்குப் பிடிக்கும். ☐
   - இ) கீழ்த்தோசைக்குத்தான் சர்க்கரை வேண்டும். ☐

ஈ) விடை எழுதுக.

1. அறிவிப்புப் பலகையில் முதல்நாள் என்ன எழுதப்பட்டிருந்தது?
2. கடைக்காரர் அறிவிப்புப்பலகையில் இரண்டாம் நாள் எவ்வாறு எழுதினார்?
3. செந்தில் கடைக்காரருக்கு இரண்டாம் நாள் கூறிய பதில் யாது?

உ) சொற்களைப் பொருள் விளங்குமாறு எழுதுக.

(எ.கா.): சாப்பா டுபோ டப்ப டும் – சாப்பாடு போடப்படும்

1. மரத்தைப்பி டிங்கினான்
2. ஆற்றோ ரமரக் கிளையிலொ ருகுரு விக்கூடு.
3. விளையா டுமிடமெல் லாம்பட் டாம்பூச்சி.

ஊ) சொற்களைப் பிரித்து வேறுபொருள் அறிக.

(எ.கா.) :

வெங்காயத்தாமரை = வெங்காயம் தாமரை

1. செங்கல்பட்டு = ________ ________
2. ஆடுதுறை = ________ ________
3. பலகை = ________ ________
4. கடிகாரம் = ________ ________
5. வைகை = ________ ________

எ) சொற்களை இணைத்து நிலாவை வருணித்து எழுதுக.

| | | |
|---|---|---|
| அழகு | | |
| வட்ட | | |
| வான் | நிலா | |
| இரவு | | |
| வெள்ளி | | |

ஏ) நிறுத்தக்குறி இடம் மாறினால் பொருள் மாறுவதை அறிவோம்.

அ) தங்கம், அத்தை வீட்டிற்குச் சென்றாள்.

(தங்கம் என்னும் பெண் அவளுடைய அத்தை வீட்டிற்குச் சென்றாள்.)

ஆ) தங்கம் அத்தை, வீட்டிற்குச் சென்றாள்.

(தங்கம் என்னும் பெயருடைய அத்தை அவளுடைய வீட்டிற்குச் சென்றாள்.)

# 6. விட்டுக்கொடு விருப்பத்துடன்

அடர்ந்த காட்டில் குளம் ஒன்று இருந்தது. அதில் தண்ணீர் குடிப்பதற்குச் சிறுத்தை ஒன்று வந்தது. அப்போது, காட்டெருமை ஒன்றும் அங்கே வந்தது. காட்டெருமையைக் கண்ட சிறுத்தை, பேரொலி எழுப்பி, 'நான்தான் முதலில் தண்ணீர் குடிப்பேன்' என்றது. இதனைக் கேட்டுக் காட்டெருமை அஞ்சவில்லை. சிறுத்தைக்கும் காட்டெருமைக்கும் இடையே வாய்ச்சண்டை வளர்ந்தது.

இவற்றின் சண்டையைக் கேட்டு, வானில் பறந்து கொண்டிருந்த கழுகுகள் கூடின. தலைவனான கழுகு மற்றக் கழுகுகளிடம், "இவற்றுக்கு இடையே இன்னும் சற்று நேரத்தில் பெருஞ்சண்டை மூளப் போகிறது. இறுதியில் யார் வெற்றி பெற்றாலும் நமக்குக் கவலை இல்லை. ஏனென்றால், தோற்ற விலங்கு நமக்கு நல்ல உணவாகும்" என்றது.

கழுகுகளின் பேச்சினைக் கவனிக்காத சிறுத்தையும் காட்டெருமையும் சண்டையில் இறங்கின. அவை ஒன்றையொன்று கடுமையாகத் தாக்கிக் கொண்டன. வெற்றி, தோல்வி என்ற பேச்சுக்கே இடமின்றிச் சண்டையிட்டன..



சிறிது நேரத்திற்குப் பிறகு, அவை இரண்டும் தற்செயலாகக் கழுகுக் கூட்டத்தைக் கவனித்தன. அவை கழுகுகளின் எண்ணத்தைப் புரிந்து கொண்டன. காட்டெருமை, சிறுத்தையிடம், 'இதோ நம்மில் யார் இறந்தாலும் தின்னுவதற்காகவே காத்திருக்கும் கழுகுக் கூட்டத்தைப் பார்' என்றது.

இதனைக் கேட்ட சிறுத்தை, 'உண்மைதான்! நமக்குள் ஆயிரம்தான் பகை இருந்தாலும் எதிரிக்குச் சிறிதும் இடம் கொடுத்துவிடக் கூடாது' என்று கூறியது. 'மாற்றானுக்கு இடம் கொடேல்' என அறிஞர்களும் கூறியிருக்கிறார்கள். ஆகவே, 'இன்றுமுதல், நாம் இருவரும் நண்பர்கள்' எனக் காட்டெருமை கூறியது. இரண்டும் விட்டுக்கொடுத்து நீரைக் குடித்தன; ஒற்றுமையாகச் சேர்ந்து சென்றன. கழுகுகள் ஏமாற்றம் அடைந்தன.

## பயிற்சிகள்

### அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. அடர்ந்த = ____________
2. பேரொலி = ____________
3. மாற்றான் = ____________
4. கொடேல் = ____________

### ஆ) பிரித்து எழுதுக.

1. ஒன்றையொன்று = ____________ + ____________
2. காட்டெருமை = ____________ + ____________
3. இடமின்றி = ____________ + ____________
4. ஏனென்றால் = ____________ + ____________
5. பெருஞ்சண்டை = ____________ + ____________

### இ) சேர்த்து எழுதுக.

1. கேட்க + இல்லை = ____________
2. வாய் + சண்டை = ____________
3. காத்து + இருக்கும் = ____________
4. பெருமை + ஒலி = ____________
5. விட்டு + கொடுத்து = ____________

ஈ) எதிர்ச்சொல் எழுதுக.

1. பெரிய x ______________________
2. வெற்றி x ______________________
3. கவலை x ______________________
4. பகை x ______________________
5. சேர்ந்து x ______________________

உ) உரிய விடையை எழுதுக.

1. பேரொலி எழுப்பிய விலங்கு ____________ (காட்டெருமை / சிறுத்தை)
2. வானில் பறந்து கொண்டிருந்த பறவை ____________ (கழுகு / காகம்)
3. சிறுத்தைக்கும் காட்டெருமைக்கும் இடையே ____________ சண்டை வளர்ந்தது. (வாய் / கத்தி)
4. மாற்றானுக்கு __________________ கொடேல் என்று அறிஞர்களும் கூறியிருக்கிறார்கள். (இடம் / பணம்)
5. இன்று முதல், நாம் இருவரும் _______________ எனக் காட்டெருமை கூறியது. (பகைவர்கள் /நண்பர்கள்)

ஊ) விடை எழுதுக.

1. சிறுத்தையும் காட்டெருமையும் எங்குச் சென்றன ?
2. காட்டெருமையிடம் சிறுத்தை கூறியது என்ன ?
3. கழுகுத்தலைவன் மற்றக் கழுகுகளிடம் கூறியது என்ன ?
4. சிறுத்தையும் காட்டெருமையும் தற்செயலாக எவற்றைக் கவனித்தன ?
5. ‘விட்டுக்கொடு விருப்பத்துடன்’ – பாடம் உணர்த்தும் நன்னெறி யாது ?

எ) புதிய சொற்களை உருவாக்குக.

(எ.கா.) கடுஞ்சண்டை – கண், கடை, சடை, சண்டை.

1. விடுதலை நாள் ________ ________ ________ ________
2. கரும்பலகை ________ ________ ________ ________
3. பழக்கவழக்கம் ________ ________ ________ ________
4. செங்கல்பட்டு ________ ________ ________ ________

ஏ) கொடுக்கப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ப மாற்றி எழுதுக.

படி வரை

(எ.கா.) நான் படித்தேன். சுதா வரைந்தாள்.

நாங்கள் ____________ முத்து ____________

அவன் ____________ நான் ____________

அவள் ____________ நாங்கள் ____________

அவர்கள் ____________ இவர்கள் ____________

ஐ) கதையைத் தொடர்ந்து எழுதுக. தலைப்பைத் தருக.



____________________________

மணி, மாதவன் இருவரும் நண்பர்கள். அன்று அவர்களுக்குப் பள்ளி விடுமுறை. காய்கறி வாங்க இருவரும் சந்தைக்குச் சென்றனர். வழியில், நாய் ஒன்று பசியுடன் இருந்ததனைப் பார்த்தனர். மணி, நாய்க்கு உதவ எண்ணி ____________________________

____________________________

____________________________

____________________________

____________________________

____________________________

____________________________

# 7. காண்போம்! கற்போம்!

(ஞாயிறு விடுமுறை நாள். மங்கை, தன் தோழி நங்கையின் இல்லத்திற்குச் செல்கிறாள்)

நங்கை : மங்கை, நாம் இருவரும் சேர்ந்து இன்று ஓர் இடத்திற்குச் செல்லலாமா ?

மங்கை : ஓ, செல்லலாமே! எங்கே செல்கிறோம் என்பதனை நான் தெரிந்து கொள்ளலாமா ?

நங்கை : உனக்கு மிகவும் பிடித்த இடம்தான். அங்குச் சென்றபின் தெரிந்துகொள்ளலாம்.

(வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு இருவரும் செல்கின்றனர்)

மங்கை : மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இங்குள்ள பறவைகளையும் விலங்குகளையும் பார்க்க வேண்டும் என்பது என் நெடுநாள் ஆசை.

(இருவரும் பூங்காவினுள் செல்கின்றனர்)






**நங்கை :** அதோ! பூங்காவின் வேலை நேர அறிவிப்புப் பலகை "காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை வேலை நேரம்" என்று எழுதி உள்ளனர்.

**மங்கை:** அதோ! அனுமதிச் சீட்டு வழங்கும் இடம். அங்குச் சென்று அனுமதிச்சீட்டு வாங்கி உள்ளே செல்லலாம்.




**மங்கை :** இதோ! பறவைகளையும் மான்களையும் பார்ப்பதற்குச் செல்லும் வழி குறிக்கப்பட்டு உள்ளது.

(இருவரும் உள்ளே செல்கின்றனர்)



**நங்கை :** மங்கை, அங்கே பார்! ஆண் மயில் தோகையை விரித்து ஆடுவது பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக உள்ளது!

**மங்கை :** அதோ! அழகிய புள்ளிமான்கள். அவை அனைத்தும் கூட்டமாக இருப்பதனைப் பார்! மயிலுக்குத் தோகை அழகு! மான்களுக்குக் கொம்புகள் அழகு!

(பறவைகளையும் மான்களையும் பார்த்து மகிழ்ந்தனர்)



நங்கை : அதோ, அந்த அறிவிப்புப் பலகையைப் பார். புதுமையாக இருக்கிறதே!




மங்கை : ஆம், நங்கை. நாம் விலங்குகளுக்குத் தொல்லை தரக் கூடாது என்பதற்கான அறிவிப்பு அது. அதோ, நெகிழிப் (பிளாஸ்டிக்) பயன்பாட்டைக் குறிக்கும் அறிவிப்பையும் பார்.

**பிளாஸ்டிக் மற்றும் பாலிதின் பை பூங்காவினுள் அனுமதி கிடையாது.**

நங்கை : இன்றுமுதல் நெகிழியால் ஆன பொருள்களைப் பயன்படுத்தாமல் விட்டுவிடுவோம். அதற்கு உறுதிமொழி எடுத்துக் கொள்வோம்.




(இருவரும் சிறுவர் பூங்காவிற்குள் சிறிது நேரம் விளையாடி மகிழ்ந்தனர். பின்னர், வீட்டிற்குச் செல்ல பேருந்தில் ஏறினர். வழியில்...)



நங்கை : பேருந்து ஏன் நின்றுவிட்டது?

மங்கை : அதோ சிவப்பு விளக்கு ஒளிர்கிறது. எனவே பேருந்து நின்றுவிட்டது. மஞ்சள் விளக்கு ஒளிர்ந்தவுடன் பேருந்து புறப்படத் தயாராகும்; பச்சை விளக்கு ஒளிர்ந்தவுடன் செல்லும்.



நங்கை : சாலையின் குறுக்கே வெள்ளைக் கோடுகள் எதற்காக?

மங்கை : நடந்து செல்பவர்கள் இந்த இடத்தில் தான் சாலையைக் கடந்து செல்லுதல் வேண்டும்.



(அவர்கள் கண்ட குறியீடுகள்)



இடப்பக்கம் திரும்புக



பள்ளிப்பகுதி, மெதுவாகச் செல்லவும்



மருத்துவமனை உள்ளது, ஒலி எழுப்பாதே

மங்கை : அதோ! கைத்தறித் துறையின் விளம்பரத்தைப் பார்.




நங்கை : இந்த விளம்பரத்தை நான் தொலைக்காட்சியில் பார்த்துள்ளேன். நாளிதழ்களிலும் படித்துள்ளேன். இதுவரை நான் சாலைக் குறியீடுகளைப் படிப்பதில் கவனம் செலுத்தவில்லை. இனிமேல், அவற்றைப் படித்துப் பின்பற்றுவேன்.

மங்கை : ஆம். ஒவ்வொருவரும் சாலைவிதிகளைப் பின்பற்றினால், விபத்துகளைத் தவிர்க்கலாம்.

(இருவரும் மகிழ்வுடன் வீட்டை அடைந்தனர்)

தமிழ்

## பயிற்சிகள்

**அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.**

உயிரியல் = ____________________

**ஆ) சேர்த்து எழுதுக.**

1. வண்ணத்து + பூச்சி = ____________________
2. பள்ளி + பகுதி = ____________________
3. நுழைவு + சீட்டு = ____________________
4. எடுத்து + கொள்வோம் = ____________________

**இ) விடை எழுதுக.**

1. தோழிகள் இருவரும் எங்குச் சென்றனர்?
2. தோழிகள் இருவரும் எடுத்துக்கொண்ட உறுதிமொழி யாது?
3. போக்குவரத்துக் குறியீட்டில் சிவப்பு விளக்கு ஒளிர்ந்தவுடன் நாம் என்ன செய்தல் வேண்டும்?
4. மருத்துவமனைக்கு அருகே உள்ள குறியீட்டை எழுதுக.
5. பள்ளிப் பகுதியில் உள்ள குறியீடு எதனை உணர்த்துகிறது?

**ஈ) கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்திற்கேற்ற அறிவிப்பை எழுதுக.**

(ஒலி எழுப்பாதே, பூக்களைப் பறிக்காதீர்கள், அமைதி காத்தல் வேண்டும்)

மருத்துவமனை



____________________

நூலகம்



____________________

பூங்கா



____________________

**உ) விளையாடுவோம்.**

வகுப்பறையில் மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்திடுக. சாலைக்குறியீடுகளைத் தனியாகவும், விளக்க அட்டைகளைத் தனியாகவும் வைத்திடுக. முதல் குழுவில் ஒரு மாணவனைக் குறியீடு அட்டைகளில், ஏதேனும் ஒரு குறியீடு அட்டையை எடுத்துக் காட்டச் செய்க. இரண்டாவது குழுவில் உள்ளவர்களில் ஒருவரைக் குறியீட்டிற்கு ஏற்ற விளக்க அட்டையை எடுத்துப் பொருத்திக் காட்டச் செய்க.

# 8. நேர்மை தந்த பரிசு

இளவரசன் ஒருவன், நேர்மையான பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினான். அதற்காகத் தன் நாட்டு அமைச்சர்களிடம் கருத்துக் கேட்டான். அவர்கள் கூறியபடி நாட்டிலுள்ள இளம்பெண்களை வரவழைத்தான். இளவரசன், வந்திருந்த பெண்களுக்குப் போட்டி ஒன்றனை அறிவித்தான்.



"பெண்களே..... உங்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு விதை தருவேன். நீங்கள் விதைகளை ஊன்றி வளர்த்தல் வேண்டும். ஆறு மாதங்களில் யாருடைய செடி நன்றாக வளர்ந்துள்ளதோ அவரே இந்நாட்டின் அரசியாவார்" என்றான். இளவரசனிடம் பெண்கள் ஆளுக்கொரு விதையை ஆர்வத்துடன் பெற்றுச் சென்றனர்.

அரண்மனையில் பணியாற்றும் பணிப்பெண்ணின் மகளும் விதையைப் பெற்றாள். அதனை வீட்டிற்கு எடுத்துச் சென்றாள். ஒரு தொட்டியில் மண் நிரப்பி, நீரைத் தெளித்து, விதையை ஊன்றினாள். கண்ணுங்கருத்துமாகப் பார்த்து வந்தாள்.



மூன்று மாதங்கள் ஆகியும் விதை முளைக்கவில்லை. அப்பெண் கவலையுடன் உழவர்களிடம் சென்றாள். அவர்களிடம் செடி வளர்ப்பது குறித்துக் கேட்டாள். அதன்படியும் முயற்சி செய்தாள். ஆனால், ஒரு பயனும் இல்லை.

இளவரசன் குறிப்பிட்ட நாளும் வந்தது. பணிப்பெண்ணின் மகள் எவ்வளவு முயற்சி செய்தும் செடி முளைக்கவில்லை. ஆனாலும், செடியில்லாத மண் தொட்டியுடன் அரண்மனைக்குச் சென்றாள். அவளைத் தவிர, மற்றப் பெண்கள் அனைவரும் வண்ணவண்ண மலர்கள் மலர்ந்த பூந்தொட்டியுடன் வந்திருந்தனர்.

இளவரசன் அனைவரது மலர்த்தொட்டிகளையும் பார்த்தான். தன் முடிவினை அறிவித்தான். "வெறுந்தொட்டியுடன் வந்த பெண்ணையே அரசியாகத் தேர்வு செய்துள்ளேன்" என்றான்.

ஆம், "இந்தப் பெண் மட்டுந்தான் நேர்மை என்னும் விதையைப் பயிர் செய்தாள். நான் கொடுத்த விதைகள் எல்லாம் முளைக்கும் திறனற்ற விதைகளே" என்று கூறினான். பூந்தொட்டியுடன் வந்திருந்த பெண்கள் பதில் கூறமுடியாமல் சிலையாக நின்றனர்.

## பயிற்சிகள்

**அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.**

1. பணி = ________________
2. அரண்மனை = ________________
3. நேர்மை = ________________

**ஆ) பிரித்து எழுதுக.**

1. வந்திருந்த = ________________
2. ஆளுக்கொரு = ________________
3. பணியாற்றும் = ________________
4. செடியில்லாத = ________________
5. மலர்த்தொட்டி = ________________

இ) சேர்த்து எழுதுக.

1. நாட்டில் + உள்ள = ____________
2. பணி + பெண் = ____________
3. எடுத்து + சென்றாள் = ____________
4. பூ + தொட்டி = ____________

ஈ) விடை எழுதுக.

1. இளவரசன் போட்டியில் பங்கேற்க வந்தவர்களிடம் என்ன கொடுத்தான் ?
2. பணிப்பெண்ணின் மகள் விதையை எடுத்துச் சென்று என்ன செய்தாள் ?
3. பணிப்பெண்ணின் மகள் விதையை முளைக்க வைக்க யாரிடம் சென்று அறிவுரை கேட்டாள் ?
4. அரசியாக இளவரசன் யாரைத் தேர்வு செய்தான் ?
5. இளவரசன் பணிப்பெண்ணின் மகளைத் தேர்வு செய்யக் காரணம் என்ன ?

உ) விடுபட்ட சொற்களைக் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு நிரப்புக.


(தூண்டில், மீன்கொத்தி, காகம், தாமரை மலர்கள், மையப்பகுதி, மரங்கள்)



எங்கள் ஊரில் உள்ள குளத்தில் சிவப்பு, வெள்ளைத் ____________ அழகாகப் பூத்திருக்கின்றன. குளக்கரையைச் சுற்றிலும் ____________ உள்ளன. மரத்தின்மீது ____________, ____________ ஆகிய பறவைகள் இருக்கின்றன. குளக்கரையில் இருவர் ____________ போட்டு மீன் பிடித்துக்கொண்டு இருக்கின்றனர். சிலர் குளத்தின் ____________ வரை நீந்திச் செல்கின்றனர். தாமரைக் குளம்தான் எவ்வளவு அழகு !

# 9. ஊர் செழித்தது





மலையும் சோலையும் சூழ்ந்த ஓர் அழகிய சிற்றூர். அந்த ஊரில் பசுமையான வயல்கள் நிறைந்திருந்தன. ஒருநாள் மாலைப்பொழுது, சூரியன் மேற்குத் திசையில் மறையத் தொடங்கியது. பறவைகள் ஒலி எழுப்பிக் கொண்டு தத்தம் கூடுகளுக்குத் திரும்பின. ஆடுகளும் மாடுகளும் வீடுகளுக்குத் திரும்பின. வானத்தில் கருமேகங்கள் திரண்டன. தொலைவில் மழைபெய்வதன் அறிகுறியாக ஈரக்காற்று வீசியது; ஊரெங்கும் மண்மணம் வீசியது. சிறிது நேரத்தில் கனமழை பெய்யத் தொடங்கியது. அதனால், தெருக்களில் மழைநீர் பெருக்கெடுத்து வெள்ளமாக ஓடியது.

மறுநாள் காலையில் ஊரின் அருகில் இருந்த ஏரி நிரம்பி இருந்தது. அவ்வூர்த் தெருக்களில் தேங்கியிருந்த மழைநீரில் குழந்தைகள் குதித்தபடி சென்றனர். சிலர், காகிதத்தில் கப்பல்கள் செய்து நீரில் மிதக்க விட்டனர். முதல் நாள் பெய்த மழையால் பயிர்கள் செழித்து வளரும். அதனால், விளைச்சல் பெருகும். இதனால் ஊர் வளம்பெறும் என மக்கள் மகிழ்ந்தனர்.

## பயிற்சிகள்

### அ) அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. சிற்றூர் = ____________________

2. திரண்டன = ____________________

3. சோலை = ____________________

### ஆ) பிரித்து எழுதுக.

1. சிற்றூர் = ______ + ______
2. கருமேகங்கள் = ______ + ______
3. பெருக்கெடுத்து = ______ + ______
4. தேங்கியிருந்த = ______ + ______

### இ) சேர்த்து எழுதுக.

1. தெரு + எங்கும் = ______
2. ஒலி + எழுப்பி = ______
3. ஈரம் + காற்று = ______
4. தம் + தம் = ______

### ஈ) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. பறவைகள் | – | திரண்டன |
| 2. மேகங்கள் | – | நிரம்பியது |
| 3. மழை | – | ஒலி எழுப்பின |
| 4. வெள்ளம் | – | பெய்தது |
| 5. ஏரி | – | ஓடியது |

### உ) செயல் திட்டம்

மாலை நேரம், மேகம், மழை, வெள்ளம், ஏரி, பயிர், குளிர், போர்வை, வடை, சன்னல், நாய், ஆடு, தெரு, மழைநீர் ஒழுகுதல், ஓடுதல், நனைதல், விறகு, துணி, கோழி முதலிய சொற்களில் ஒன்றனைப் பற்றி ஒவ்வொரு மாணவனையும் ஒவ்வொரு சொற்றொடர் கூறச்செய்க. அச்சொற்றொடர்களைக் கொண்டு கதை ஒன்று உருவாக்குக.

### ஊ) முதல் இரண்டு எழுத்துகளின் அடிப்படையில் அகரவரிசைப்படுத்துக.

தட்டம், தரம், தங்கம், தனயன், தவளை, தச்சர், தளிர் , தந்தை, தண்ணீர், தம்பி, தல்லாகுளம், தழல், தறி, தத்தை, தக்காளி, தப்பாட்டம், தஞ்சாவூர், தயிர்.

______

______

______

ஏ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

எடுத்துக்காட்டு : கண்ணன் பாடினான்.
கண்ணகி பாடினாள்.

1. பூங்குழலி படித்தாள்.
எழிலன் ____________________

2. மாணவன் விளையாடினான்.
மாணவர்கள் ____________________

3. மாடு மேய்ந்தது.
மாடுகள் ____________________

4. மரம் வளர்ந்தது.
மரங்கள் ____________________

5. பறவை பறந்தது.
பறவைகள் ____________________

6. அண்ணன் பாடம் படித்தான்.
அக்காள் பாடம் ______________

7. பூப் பூத்தது.
பூக்கள் ____________________

8. கிளிகள் பறந்தன.
கிளி ____________________



9. நாய்கள் குரைத்தன.
நாய் ____________________


10. குழந்தை சிரித்தது.
குழந்தைகள் ______________

11. முருகன் பாடினான்.
கமலா ____________________

12. குதிரைகள் ஓடின.
குதிரை ____________________


ஏ) பாதிப்படம் இங்கே ! மீதிப் படத்தை நீங்கள் வரையலாமே !






ஐ) நீ தாளை எவ்வாறெல்லாம் பயன்படுத்துவாய் ?













# 10. புதிய ஆத்திசூடி

## அச்சம் தவிர்.

பொருள்: உன்னிடமுள்ள பயத்தை நீக்குதல் வேண்டும்.

சொல்பொருள்: அச்சம் – பயம்;

தவிர் – நீக்குக.

## ஆண்மை தவறேல்.

பொருள்: வீரத்தைக் கைவிடக்கூடாது.

சொல் பொருள்: ஆண்மை – வீரம்

தவறேல் – கைவிடக்கூடாது.

## இளைத்தல் இகழ்ச்சி.

பொருள்: மனம் தளர்ச்சியடைதல் தாழ்வைத் தரும்.

சொல் பொருள்: இளைத்தல் – மனத்தளர்ச்சி

இகழ்ச்சி – தாழ்வு.

## ஈகை திறன்.

பொருள்: இல்லாதவர்க்குக் கொடுப்பதே உயர்ந்த குணமாகும்.

சொல் பொருள்: ஈகை – இல்லாதவர்க்குக் கொடுப்பது,

திறன் – குணம்.

## உடலினை உறுதிசெய்.

பொருள்: உடலை வலிமையாக்குதல் வேண்டும்.

சொல்பொருள்: உறுதி – வலிமை.

## ஊண் மிகவிரும்பு.

பொருள்: உணவை மிகவும் விருப்பத்துடன் உண்ணல் வேண்டும்.

சொல் பொருள்: ஊண் – உணவு.

## எண்ணுவது உயர்வு.

பொருள்: உயர்வைத் தருகின்ற எண்ணங்களையே நினைத்தல் வேண்டும்.

சொல் பொருள்: எண்ணுவது – நினைப்பது.

### ஏறுபோல் நட.

**பொருள்:** ஆண் சிங்கத்தைப் போல நிமிர்ந்து நடத்தல் வேண்டும்.

**சொல் பொருள்:** ஏறு – ஆண்சிங்கம்.

### ஐம்பொறி ஆட்சி கொள்.

**பொருள்:** மெய், வாய், கண், காது, மூக்கு ஆகிய ஐந்து புலன்களையும் கட்டுப்படுத்தல் வேண்டும்.

**சொல்பொருள்:** ஐம்பொறி – மெய், வாய், கண், காது, மூக்கு ஆகிய ஐந்து புலன்கள்.

ஆட்சி கொள் – கட்டுப்படுத்து.

### ஒற்றுமை வலிமையாம்.

**பொருள்:** ஒற்றுமையாக வாழ்வதே வலிமையை உண்டாக்கும்.

**சொல் பொருள்:** ஒற்றுமை – சேர்ந்து வாழ்தல்.

### ஓய்தல் ஒழி.

**பொருள்:** சோம்பலை நீக்குதல் வேண்டும்.

**சொல் பொருள்:** ஓய்தல் – சோம்பல், தளர்ச்சி.

ஒழி – நீக்கு.

### ஔடதம் குறை.

**பொருள்:** மருந்து உண்பதனைக் குறைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

**சொல் பொருள்:** ஔடதம் – மருந்து.

– மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார்

## பயிற்சிகள்

**அ. பேசுக.**

1. நீ எவற்றைப் பார்த்துப் பயப்படுவாய் ? ஏன் ?
2. நீ பிறருக்கு உதவி செய்திருக்கிறாயா ? எப்படிப்பட்ட உதவிகளைச் செய்துள்ளாய் ?
3. நீ நாள்தோறும் எந்த விளையாட்டை, எப்பொழுது விளையாடுகிறாய் ?
4. நீ எந்தெந்த உணவை விரும்பி உண்கிறாய் ? ஏன் ?
5. உன் ஆசிரியர் / பெற்றோர் கூறும் வேலைகளை உடனுக்குடன் செய்து முடிக்கிறாயா ? முடிக்க இயலாததற்குக் காரணம் என்ன ?

தமிழ்

# 11. அகர முதலி

| | | |
|---|---|---|
| அடர்ந்த | – | மரங்கள் நிறைந்த |
| அரண்மனை | – | அரசனின் இல்லம் |
| ஆவல் | – | விருப்பம் |
| இருப்பிடம் | – | வாழிடம் |
| உயிரியல் | – | உயிரிகளைப் பற்றிக் கற்றல் |
| ஏரி | – | பெரிய நீர் நிலை |
| ஒலிபெருக்கி | – | ஒலியினைப் பெருக்கும் கருவி |
| கொடேல் | – | கொடுக்காதே |
| சிற்றுண்டி | – | இட்டலி, தோசை முதலிய எளிய உணவு |
| சிற்றூர் | – | சிறிய ஊர் |
| சொக்கவைக்கும் | – | மகிழ வைக்கும் |
| சோலை | – | மரம் செடி கொடிகள் நிறைந்த பகுதி |
| திடல் | – | பரந்து விரிந்த இடம் |
| திரண்டன | – | கூடின |
| பணி | – | வேலை |
| நெஞ்சை அள்ளும் | – | உள்ளத்தை ஈர்க்கும் |
| நேர்மை | – | உண்மை |
| பேரொலி | – | மிகுந்த ஒலி |
| மாற்றான் | – | பகைவன் |
| வஞ்சகம் | – | ஏமாற்றும் எண்ணம் |